திருச்சியிலே புதிதாக போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று சொன்னார்கள். திருச்சியிலே ஆரம்பிக்கப் பட இருக்கிற போக்குவரத்துக் கழகத்திற்கு ஜீவா போக்கு வரத்துக் கழகம் என்று பெயர் இட்டுவிட்டு, பெரியார் மாவட் டத்திலே இருக்கிற போக்குவரத்துக் கழகத்திற்கு கொங்குநாட்டு போக்குவரத்துக் கழகம் என்று மாற்றி அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. **முத்துசாமி** : தலைவர் அவர்களே, இலை போட்ட பின்னால்தான் என்ன என்ன வந்தது, எது எது வரவில்லை என்று நாம் பார்க்க முடியும். எனவே, திருச்சி பிரிக்கப்பட்ட பின்புதான் அதைப்பற்றியெல்லாம் கேள்வி எழும். எனவேஇப்போது வைத்த பெயரை மாற்றுவது என்பது பற்றி எந்தவிதமான பதிலும் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

கல்லணையை அழகுபடுத்தும் திட்டம்.

*வினா எண் 221— திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தொகுதியில் உள்ள கல்லணையை சோழன் போக்குவரத்துக் கழகம் சார்பில் அழகு படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் எப்போது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி

(அ) ஆம்.

(ஆ) சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலைமையைப் பொறுத்து மேற்படி திட்டம் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

அழகிரி போக்குவரத்துக் கழத்திற்கான அலுவலகம் மற்றும் பணிமனை

*வினா எண். 222—திரு. சி. கோபால் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அழகிரி போக்குவரத்துக் கழகத்திற்கு தனியாக அலுவலகம், பணிமனை திறக்கப்பட்டதா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) ஆம் எனில் எங்கே மேற்படி பணிமனை ஆரம்பிக்க பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகம் 1—12—1982 முதல் வேலூர் அப்துல்லாபுரம் முதியோர் ஓய்வூதியம் பெறும் இல்லத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கழகத்திற்கு என்று புதிதாக பணிமனைகள் திறக்கப்படவில்லை. ஏற்கனவே இருந்த பல்லவன் போக்குவரத்துக் கழக புறநகர் பணிமனைகளை பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் இயக்குகிறது.

திரு. சி. கோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்திலே நிர்வாகம் சரியான முறையிலே நடைபெற வேண்டுமென்ற நோக்கத்திலேதான் வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு பகுதியிலே ஓடுகின்ற பேருந்துகளையும் செங்கை மாவட்டத்திலே உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே சில பேருந்துகளையும் சேர்த்துநாம் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக்கழகம் என்று பெயர் வைத்திருக்கிறோம். அந்த வகையில் நிர்வாகம் சீராக நடைபெற தனியாக வேலூரில் ஒரு அலுவலகம் அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, இப்படி தனியாக அமைப்பதன் மூலமாக எத்தனை பேருக்கு புதிதாக வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒரு வண்டியை புதிதாக இயக்கினால் $7\frac{1}{2}$ பேருக்கு வேலை கிடைக்கும். எனவே எத்தனை புதிய வண்டிகளை இயக்குகிறோமோ அத்தனை $7\frac{1}{2}$ பேருக்கு வேலை கிடைக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை மாவட்டத்தையும், வட ஆற்காடு மாவட்டத்தையும் சேர்த்து அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று தனியாக ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் செங்கை மாவட்டத்திற்கு நாங்கள் அண்ணா போக்குவரத்துக்கழகத்தைத் தரவேண்டுமென்று கேட்டு அதை மறுத்திருக்கிறார்கள். எனவே அதை திருப்திபடுத்துவதற்காக காஞ்சிபுரத்தை மையமாக வைத்து அங்கே தனியாக ஒரு அலுவலகத்தை துவக்கினால், செங்கற்பட்டு மாவட்டத்தில் இருப்பவர்களுக்கும், வட ஆற்காடு மாவட்டத்தில் இருப்பவர்களுக்கும் அந்த அலுவலகத்திற்குச் சென்று பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். எனவே அந்த அலுவலகத்தை அங்கே அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே' தலைமை அலுவலகம் ஏதாவது ஒரு இடத்திலேதான் இருக்க முடியுமே. தவிர கிளை அலுவலகம் தேவை என்று நினைத்தால், அந்த இடத்தைப் பார்த்துவிட்டு, தேவை ஏற்படுமானால், சூழ்நிலையைப் பார்த்து சரியாக இருக்குமானால், அரசாங்கம் செய்வதற்கு தயக்கம் காட்டாது என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்து கழகத்தில் நடப்பாண்டில் எத்தனை பேருந்துகள் புதிதாகவிட அரசு உத்தேசித்து உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதற்கான விளக்கம் என்னிடத்தில் இல்லை. பட்ஜெட் கூட்டம் வரவிருக்கிறது.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் என்ற நிலையை அரசாங்கம் ஏற்று இருந்தும்கூட, செங்கற்பட்டு மாவட்டத்தில் இருந்த பல்லவன் போக்குவரத்து கழகத்தை எடுத்துவிட்டு, அதற்கு, செங்கற்பட்டு மாவட்டத்தையும் வட ஆற்காடு மாவட்டத்தையும் இணைத்து அழகிரி போக்குவரத்துக் கழகம் ஆரம்பித்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திற்கு தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் இருக்கவேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறதா? அதற்கான நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசின் நோக்கம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் என்ற அடிப்படையில் இயங்கவேண்டும் என்பதாகும். ஆனால் சிறிய மாவட்டமாக இருக்கின்ற தருமபுரி, உதகமண்டலம் போன்ற மாவட்டங்களை பிற மாவட்டங்களோடு இணைத்துத்தான் செயல்படவேண்டியிருக்கிறது. அதே நிலை தான் செங்கல்படடு மாவட்டத்திற்கும் இருக்கிறது. எதிர்காலத்தில் சூழ்நிலை சரியாக இருந்து, தனியாக ஒரு போக்குவரத்துக் கழகம் தேவை என்ற நிலை ஏற்படுமானால் அதை கவனிக்கலாம்.

மாவட்ட போக்குவரத்து கமிட்டிகள்.

*வினா எண் 223—திரு. மு. ஜான் வின்செண்ட் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாவட்ட அளவில் உள்ள மாவட்ட போக்குவரத்து கமிட்டிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறாதது அரசுக்குத் தெரியுமா?